

# ஜெயங்கொண்டத்தில் காலணி தொழிற்சாலை- முதல்வர் நாளை அடிக்கல்

# தமிழகம் முழுவதும் டாக்டர்கள் போராட்டம்

# அனைத்து மருத்துமனைகளிலும் போலீஸ் பூத் அமைக்க முடிவு


மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 14-11-2024 வியாழக்கிழமை •வெளியூர்: 15-11-2024 வெள்ளிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்

SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் ஐப்பசி 28
ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 11

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● வியாழக்கிழமை, நவம்பர் 14, 2024 ● வெளியூர்: 15-11-2024, வெள்ளிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 127 ● 6 பக்கம் ● ரூ.6

# ஜெயங்கொண்டத்தில் ரூ.1000 கோடி முதலீட்டில் காலணி தொழிற்சாலை

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை அடிக்கல் நாட்டுகிறார்

**அரியலூர், நவ. 14-**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் அரசால் செயல்படுத்தப் படும் மக்கள் நலத் திட்டங்கள் பொதுமக் களுக்கு முறையாக கிடைக்கிறதா? அரசின் வளர்ச்சி பணிகள் சரியாக நடக்கின்றனவா? என்பதை மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் செய்து, நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

அதன்படி கடந்த 5, 6ந்தேதிகளில் கோவை மாவட்டத்தில் கள ஆய்வை தொடங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 9,10 ந்தேதிகளில் விருதுநகரில் கள ஆய்வு செய்தார். இதன் தொடர்ச்சியாக அரியலூர், பெரம்பலூர் மாவட்டங் களில் செயல்படுத்தப் பட்டுள்ள அரசின் நலத் திட்டங்கள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் நாளை (வெள்ளிக் கிழமை) கள ஆய்வு மேற் கொள்கிறார். இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (வியாழக்கிழமை) மாலை சென்னையில் இருந்து விமானம் திருச்சி விமான நிலையத்திற்கு வருகிறார்.

பின்னர் அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பொதுப்பணித்துறை பயணியர் விடுதிக்கு சென்று இரவு தங்கி ஓய்வு எடுக்கிறார்.

நாளை காலை 9.30 மணியளவில் ஜெயங் கொண்டம் அருகே உள்ள மகிமைபுரத்தில் 130 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வரும் சிப்காட் தொழில் வளாகத்தில், தைவான் நாட்டை சேர்ந்த டீன் ஷூஸ் குழுமம் ரூ.1,000 கோடி முதலீட்டில் காலணி உற்பத்தி தொழிற்சாலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டுகிறார்.

அதனை தொடர்ந்து அவர் திருமானூர் ஒன்றியத்துக்குட்பட்ட வாரணவாசி கிராமத்தில் உள்ள அரசு பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் தமிழக அரசின் ஊட்டச் சத்து உறுதி திட்டத்தின் விரிவாக்கத்தை தொடங்கி வைக்கிறார்.

இந்த திட்டம் ஏற்கனவே கடந்த 2022ம் ஆண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலி னால் தொடங்கி வைக்கப் பட்டது. இந்த திட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட் டுள்ள பிறந்தது முதல் 6 மாதம் வரையிலான குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங் களை அவர்களின் வீட் டிற்கே சென்று வழங்குவ தோடு மட்டுமல்லாமல், குழந்தைகளின் நிலையை தொடர்ந்து கண்காணிக்கப் படுகிறது.



இந்த திட்டத்தின் 2ம் கட்டம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப் பட உள்ளது. இதை தொடர்ந்து காலை 11.15 மணியளவில் அரியலூர் செந்துறை சாலையில் கொல்லாபுரத்தில் நடை பெறும் அரசு விழாவில் அரியலூர் மாவட்டத்தில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் 26 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். தொடர்ந்து , 51 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். மேலும் 10,141 பயனாளி களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்.

இதே விழாவில் பெரம்பலூர் மாவட்டத்தில் 27 புதியதிட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். தொடர்ந்து, 456 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். மேலும் 11,721 பயனாளி களுக்கு நலத்திட்ட உதவி களை வழங்கி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் சிறப்புரையாற்றுகிறார்.

பின்னர் மதியம் 12.50 மணிக்கு பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்திற்கு வந்து மதிய உணவு சாப்பிடுகிறார். பின்னர் சற்று நேரம் அங்கு ஓய்வெடுக்கிறார். அதன் பின்னர் மாலை 4.30 மணியளவில் பெரம்பலூர் நான்கு ரோடு அருகே அரியலூர் சாலையில் உள்ள பூமணம் திருமண மஹாலில் நடைபெறும் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கிறார். அப்போது அவர், 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது குறித்து பெரம்பலூர் அரியலூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

கூட்டம் முடிந்ததும் மாலை 6 மணிக்கு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் கார் மூலம் திருச்சி விமான நிலையத்துக்கு இரவு 6.55 மணிக்கு செல்கிறார். அங்கிருந்து இரவு 7.55 மணிக்கு விமானம் மூலம் சென்னை புறப்பட்டு செல்கிறார்.

அரியலூர், பெரம்பலூர் மாவட்ட அரசு நிகழ்ச்சி களை போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் செய்து வருகின்றன. பெரம்பலூரில் முதலமைச் சர் வரவேற்பு மற்றும் கட்சி கூட்ட ஏற்பாடுகளை முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசா எம்.பி. தலைமை யில் கட்சியினர் செய்து வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையை யொட்டி அரியலூர் பெரம்பலூர் மாவட்டங் களில் திருச்சி மத்திய மண்டல போலீஸ் ஐ.ஜி. கார்த்திகேயன் தலைமை யில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரும் பாதையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையை முன்னிட்டு அவர் பயணம் செய்யும் சாலைகளில் பாதுகாப்பு கருதி இன்று (வியாழக்கிழமை) டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது. மேலும் நாளை (வெள்ளிக்கிழமை) அரியலூர், பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு வருகை தந்து சென்னை செல்ல உள்ளதால் அன்றும் டிரோன்கள் இயக்கத்திற்கும் மாவட்ட நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டு உள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை யால் தி.மு.க. தொண்டர்கள் உற்சாகம் அடைந்துள்ளன. அவர் பங்கேற்கும் விழா நடைபெறும் இடங்கள், அவர் செல்லும் வழிகளிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

## அரசு ஆஸ்பத்திரிகளில் பாதுகாப்பு குறித்து கூட்டு தணிக்கை நடத்தப்படும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



**சென்னை, நவ.14-**

சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு ஆஸ்பத்திரியில் அரசு டாக்டர் மீது வாலிபர் வெறித்தனமாக தாக்குதல் நடத்தினார். கத்திக்குத்தால் பாதிக்கப்பட்ட டாக்டருக்கு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் டாக்டரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து அவரது உடல்நிலை குறித்து கேட்டறிந்தார்.

டாக்டர் பாலாஜியை சந்தித்து நலம் விசாரித்த பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

* கத்திக்குத்தால் பாதிக்கப்பட்ட டாக்டர் பாலாஜி எங்களிடம் சகஜமாக பேசினார்.
* பாலாஜிக்கு பொருத்தப்பட்ட பேஸ்மேக்கரின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது.
* இன்று மதியத்திற்கு பின்னர் டாக்டர் பாலாஜி தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து தனியறைக்கு மாற்றப்படுவார்.
* டாக்டரை கத்தியால் குத்திய விக்னேஷின் மீது 7 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.
* மருத்துவ கட்டமைப்பில் புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
* அரசு ஆஸ்பத்திரிகளில் பாதுகாப்பு குறித்து கூட்டு தணிக்கை நடத்தப்படும்.
* நோயாளியுடன் வருவோருக்கு டேக் பயன்பாடு சோதனை முறையில் நடைமுறையில் உள்ளது என்று தெரிவித்தார்.

## சென்னையில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போலீஸ் பூத் மாநகர காவல்துறை முடிவு



**சென்னை, நவ.14-**

சென்னை கிண்டி அரசு பல்நோக்கு மருத்துவமனையில், புற்றுநோய் பிரிவு டாக்டர் பாலாஜியை, விக்னேஷ் என்ற இளைஞர் கத்தியால் குத்தினார். இதனால் காயமடைந்த டாக்டர் அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், விக்னேஷ் மீது 7 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சூழலில் டாக்டரை தாக்கிய விக்னேசுக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல் விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனையில் டாக்டர் தாக்கப்பட்ட நிலையில், சென்னையில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போலீஸ் பூத் அமைக்கப்படும் என சென்னை மாநகர காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது. இதன்படி ஒவ்வொரு போலீஸ் பூத்திலும் 10 போலீசார் பணியில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் உள்ள 19 மருத்துவமனைகளில் ஏற்கனவே 9 மருத்துவமனைகளில் காவல் நிலையம், பூத்துகள் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 மருத்துவமனைகளிலும் போலீஸ் பூத்துகள் விரைவில் அமைக்கப்படும் என்று சென்னை மாநகர காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மருத்துவருக்கு கத்திக்குத்து: தமிழகம் முழுவதும் டாக்டர்கள் போராட்டம்: நோயாளிகள் அவதி

**சேலம். நவ. 14-**

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் டாக்டர்கள் பழைய டீன் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்க நிர்வாகி செந்தில்குமார் தலைமை தாங்கினார். இதில் டாக்டர்கள், பயிற்சி டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு ஆஸ்பத்திரி முன்பு அரசு மருத்துவமனை டாக்டர்கள் மற்றும் இந்திய மருத்துவ சங்கத்தை சேர்ந்த டாக்டர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அரசு மருத்துவமனை சங்கத்தின் மாவட்ட தலைவர் டாக்டர் அருள் தலைமையில் நடைபெற்றது.

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டத்திலும் இன்று அரசு மற்றும் தனியார் டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் புதுக்கோட்டை கிளை, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர்கள் மற்றும் இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை இணைந்து இந்த போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புற நோயாளிகள் பிரிவு முன்பு டாக்டர்கள் திரண்டு தர்ணா நடத்தினர் . புதுக் கோட்டை மற்றும் அறந்தாங்கி சுகாதாரப் பணிகள் கீழ் இயங்கும் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் 500க்கும் மேற்பட்ட அரசு மருத்துவர்கள் 300க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.




சென்னையில் டாக்டர் தாக்குதலுக்கு நீதி கிடைக்க வேண்டியும், மருத்துவ மனைகளை பாதுகாப்பு பகுதியாக அறிவிக்க வேண்டியும் மற்றும் தேசிய மருத்துவர்கள் பாதுகாப்பு சட்டம் வேண்டியும் இந்த போராட்டம் நடைபெற்றது.

**தேனி**

தேனி மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் டாக்டர்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள சுமார் 500 தனியார் ஆஸ்பத்திரிகள் மூடப்படுவதாக வும், 700 டாக்டர்கள் இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் பங்கேற்றுள்ளதாகவும், இந்திய மருத்துவ கழக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் புறநோயாளிகள் பிரிவு இன்று செயல்பட வில்லை. இதனால் மருத்துவம் பார்க்க வந்த நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். மேலும் ஆண்டிபட்டி அரசு ஆஸ்பத்திரியில் புறநோயாளி களுக்கு சீட்டு எழுதும் இடம் பூட்டப்பட்டிருந்தது.

இதனால் நோயாளிகள் எங்கு செல்வது என தெரியாமல் அவதியடைந்தனர். போடி அரசு ஆஸ்பத்திரியில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான புறநோயாளிகள் வந்து செல்லும் நிலையில் அங்கும் சிகிச்சை மேற்கொள்ளப்பட வில்லை.

கை, கால் முறிவு ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு வந்தவர்கள் கூட தங்களுக்கு சிகிச்சை பெற முடியவில்லையே என கண்ணீருடன் திரும்பிச் சென்றனர். ஆஸ்பத்திரி முன்பு பாதுகாப்புக்கு நின்றிருந்த போலீசாரிடம் நோயாளிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல் பெரியகுளம், தேவதானப்பட்டி, கம்பம் அரசு ஆஸ்பத்திரி, ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் டாக்டர்கள் போராட்டத்தால் நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

**திண்டுக்கல்**

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று மாலை முதல் டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று மாலை வரை பணிக்கு திரும்ப மாட்டோம் என்று தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து இன்று காலை புறநோயாளிகள் பிரிவில் அரசு மருத்துவக் கல்லூரி டீன் சுகந்தி ராஜகுமாரி தலைமையில், கண்காணிப்பாளர் வீரமணி, துணை கண்காணிப்பாளர் சுரேஷ் பாபு மற்றும் நிர்வாக மருத்துவர்கள், புறநோயாளிகள் பிரிவு நுழைவாயிலில் மருத்துவம் பார்த்தனர்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மருத்துவம் நடந்து வருகிறது. அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் 3,500 வெளிநோயாளிகள் வருகை தருகின்றனர். அவர்களுக்கு வழக்கம் போல் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**திருப்பூர்**

திருப்பூர் அரசு மருத்துவ க்கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு மருத்துவர்கள் பணிகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் குறித்து அறியாத நோயாளிகள் மருத்துவமனை வந்து சிகிச்சை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மேலும் டாக்டர்களுக்கு பாதுகாப்பு வழங்க கோரியும், அரசு டாக்டரை கத்தியால் குத்திய நபர் மீது கடும் நடவடிக்கை எடுக்க கோரியும் மருத்துவமனை முன்பு டாக்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் இந்தியாவில் உள்ள மருத்துவர்களுக்கு அதிர்ச்சியையும், கவலையையும் கொடுத்துள்ளது.

இந்த வேலை நிறுத்தம் மூலம் தாக்குதல் நடத்திய நபர் மீது சட்டம் 48/2008 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து தண்டனை பெற்று தரவேண்டும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## சமுதாயக்கூடம் கட்டுமான பணி துவக்க விழா



**தஞ்சாவூர், நவ. 14–**

திருவிடைமருதூர் தாலுகா கோவில் சன்னாபுரத்தில் அப்பகுதி சேர்ந்த பொதுமக்கள் உயர்கல்வித்துறை அமைச்சரிடம் புதிதாக சமுதாயக்கூடம் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். கோரிக்கையை ஏற்று சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன், சமுதாயக்கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான கல்யாணசுந்தரம், மாவட்ட அவைத் தலைவர் நசீர் முகமது, ஒன்றிய பெருந்தலைவர் சுபா திருநாவுக்கரசு, பேரூராட்சி தலைவர் புனிதா மயில்வாகனன், துணைத் தலைவர் சுந்தர ஜெயபால், திருப்பனந்தாள் ஒன்றிய துணை பெருந்தலைவர் அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர் கூகுர் அம்பிகாபதி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஜிகேஎம் ராஜா, சரவணன், செயல் அலுவலர் ராஜதுரை, இளநிலை பொறியாளர் ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வீரமணி, அருளாளன் மற்றும் நிர்வாகிகள் ,பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் வளாகத்தில் வணிக வளாக கடை திறப்பு



**மேல்மலையனூர், நவ. 14–**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோவில் வளாகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 1 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 வணிகவளாக கடைகள் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிதாக கட்டப்பட்ட 35 வணிக வளாக கடைகளை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து புதியதாக திறந்து வைக்கப்பட்ட வணிக வளாகக் கடையில்செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் குத்து விளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், இந்துசமய அறநிலைத்துறை இணை ஆணையர் மோகனசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் ஜீவானந்தம் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், துணைச் சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன் ஒன்றிய கவுன்சிலர் நெடுஞ்செழியன், ஊராட்சி மன்ற தலைவர்கள், இந்து சமய அறநிலைத்துறை உதவிஆணையர் விழுப்புரம் சக்திவேல், அறங்காவலர் குழு தலைவர் மதியழகன், அறங்காவலர்கள் சுரேஷ், ஏழுமலை, பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம், ஆய்வாளர் சங்கீதா கண்காணிப்பாளர் பாக்கியலட்சுமி காசாளர் சதீஷ் உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

தலையங்கம்
மாலை எக்ஸ்பிரஸ்
14.11.2024 (வியாழக்கிழமை)

## வெங்காயம் விலை பாதிப்பை ஏற்படுத்துமா?

நாட்டிலேயே மிகப்பெரிய வெங்காய மார்க்கெட் மராட்டிய மாநிலத்தில் உள்ள நாசிக்கில்தான் இருக்கிறது. இங்கு இருந்துதான் நாட்டின் பல பகுதிகளுக்கும் வெங்காயம் எடுத்து செல்லப்படுகிறது. கடந்த மாதம் தீபாவளி நேரத்தில் வெங்காயத்தின் தேவை மிக அதிகமாக இருந்தது. அப்போது, டெல்லியில் வெங்காயத்தின் விலை தினமும் ஏறிக்கொண்டே போனது. இந்த விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசாங்க நுகர்வோர் விவகார அமைச்சகம், நாசிக்கில் இருந்து வெங்காயத்தை ஏற்றிக்கொண்டு 'கண்டா எக்ஸ்பிரஸ்' அதாவது, 'வெங்காய எக்ஸ்பிரஸ்' என்ற சிறப்பு ரெயில் டெல்லிக்கு வர ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சிறப்பு சரக்கு ரெயில் 42 பெட்டிகளை இழுத்துக்கொண்டு வந்தது. ஒவ்வொரு ரெயில் பெட்டியிலும் தலா 53 லாரிகளில் ஏற்றிக்கொண்டு செல்லும் அளவுக்கான வெங்காயம் என மொத்தம் 1,600 டன் (ஒரு டன் என்பது ஆயிரம் கிலோ) கொண்டுசெல்லப்பட்டது. லாரிகளில் பொருட்களை ஏற்றிச்செல்வதைவிட சரக்கு ரெயிலில் கொண்டு செல்வதற்கான கட்டணம் குறைவாகவே உள்ளது.

வரலாற்றிலேயே முதல் முறையாக வெங்காயம் போன்ற உணவு பொருட்கள் உற்பத்தியாகும் இடத்தில் இருந்து பெரிய நகரங்களுக்கு சிறப்பு ரெயில் மூலம் கொண்டுவரப்படுவது இதுதான் முதல்முறை என்று நுகர்வோர் விவகார அமைச்சக செயலாளர் நிதி காரே தெரிவித்துள்ளார். இதுபோல, வெங்காயத்தை ஏற்றிக்கொண்டு லக்னோ, வாரணாசி மற்றும் நாகாலாந்து, மணிப்பூர் போன்ற வடகிழக்கு மாநிலங்களுக்கும் சரக்கு ரெயில்கள் மூலம் கொண்டுசெல்ல ஏற்பாடுகள் நடக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். சரக்கு ரெயில் மூலம் வெங்காயம் கொண்டுவந்ததால் டெல்லியில் கிலோ ரூ.35க்கு விற்கப்பட்டது, தீபாவளி நேரத்தில் மிகவும் பலனுள்ளதாக அமைந்தது என்று இல்லத்தரசிகள் கூறினர். நிதி காரே ஒரு பெண் என்பதால், குடும்பங்களில் வெங்காயத்தின் விலை உயர்வு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும்? என்பதை உணர்ந்த காரணத்தால்தான் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று மகிழ்ச்சியுடன் பெண்கள் கருத்து தெரிவித்தனர்.

வெங்காயத்தின் விலை டெல்லியில் மட்டுமல்ல, அதிகம் விளையாத தமிழ்நாட்டிலும் இப்போது ஒரு கிலோ ரூ.100ஐ தொட்டுவிட்டதால், தமிழ்நாட்டுக்கும் இதுபோல சிறப்பு ரெயில் மூலம் வெங்காயத்தை கொண்டுவர மத்திய அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். ஏனெனில், தமிழ்நாட்டுக்கும் மராட்டியம், கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்துதான் லாரிகள் மூலம் வெங்காயம் கொண்டுவரப்படுகிறது.

# தென்காசி மாவட்டத்தில் சுற்றுலா பணிகளை அமைச்சர் ஆய்வு



**தென்காசி, நவ. 14–**

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலா தொடர்பான பணிகளை மேம்படுத்துவதற்காகவும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காகவும் கடனாநதி அணை, பொட்டல்புதூர் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல், குற்றாலம் நீர்வீழ்ச்சி மற்றும் கீழப்பாவூர் பெரியகுளம் போன்ற பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார் முன்னிலையில் சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் கள ஆய்வு செய்து தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். அந்த வகையில் தென்காசி மாவட்டம் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு மாவட்டமாகும். இங்கு தென்காசி காசிவிஸ்வநாதர் கோவில். இலஞ்சி குமாரர் கோவில், பண்பொழி திருமலைக் கோவில், அச்சன்கோவில் போன்ற பிரசித்திபெற்ற கோவில்களும், குற்றால அருவி, பழைய குற்றாலம், புலியருவி, ஐந்தருவி போன்ற அருவிகளும் நிறைந்து காணப்படும் மாவட்டமாகும்.

அதன்படி இன்றைய தினம், தென்காசி மாவட்டம் தென்காசி வட்டம் தர்மாபுரம் மடம் கிராமத்தில் அமைந்துள்ள கடனாநதி அணை ஆழ்வார்குறிச்சி பேரூராட்சி பகுதிக்கு பிரதான குடிநீர் அமைப்பாக இருந்து வருகிறது. கடனாநதி அணை பூங்காவினை பார்வையிட வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் புதிதாக பூங்காவின் நுழைவுச் சீட்டு வளாகம் அமைத்தல், வாகனம் நிறுத்தும் இடம் சுற்றுலா பயணிகள் உள்ளே செல்லவும் வெளியேற்றும் பாதையை அகலப்படுத்துதல், உணவுக் கூடங்களை மேம்படுத்துதல், குடிநீர் மற்றும் சுகாதார பணிகளை மேம்படுத்துதல்,

விளையாட்டு உபகரணங்கள், இசை நீரூற்றுகள், மாற்றுத் திறனாளிகளுக்கான பேட்டரி வாகனம் மற்றும் குப்பைகளை மறு சுழற்சி ஏற்பாடுகள் போன்றவைகளை மேம்படுத்துவது குறித்தும், பொட்டல்புதூர் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசலில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி விழாவிற்கு வெளிமாநிலங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் வருகை புரிவதால் அனைவரும் தங்குவதற்கு ஏதுவாக, தங்கும் விடுதி, கழிப்பிடம் மற்றும் பார்க்கிங் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைப்பது குறித்தும்,

குற்றாலத்தில் சீசன் காலங்களில் அனைத்து ஊர்களிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் மக்கள் வருகை புரிந்து குற்றாலச்சாரலினை அனுபவித்துச் செல்வர். இங்கு சுற்றுலாத்துறை சார்பாக சாரல் திருவிழா 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும். சாரல் திருவிழாவில் ஒவ்வொரு நாட்களிலும் கலைநிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு கண்டு மகிழ்ந்து செல்வர்.

எனவே குற்றாலத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்தும், மேலும், கீழப்பாவூர் பேரூராட்சிக்குட்பட்ட பெரியகுளத்தில் புதிதாக படகு குழாம் அமைப்பதற்கான பணியினை நேரில் பார்வையிட்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, திமுக தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன், செயற்பொறியாளர் (சிற்றாறு வடிநிலக்கோட்டம்) தனலெட்சுமி, உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணிய பாண்டியன், உதவிப் பொறியாளர் உமாபதி, கடையம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், ராதாகிருஷ்ணன், சுற்றுலா அலுவலர் சீனிவாசன், குற்றாலம் செயல் அலுலர் சுஷ்மா, தென்காசி வட்டாட்சியர் ராம்குமார், கீழப்பாவூர் பேரூராட்சி மன்றத் தலைவர் ராஜன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தென்காசியில் குழந்தைகள் தின விழிப்புணர்வு பேரணி




**தென்காசி, நவ. 14–**

தென்காசி மாவட்டம் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவை துறை சார்பில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளை தடுத்தல் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் தொடங்கி வைத்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் மதிவதனா, தென்காசி கோட்டாட்சியர் லாவண்யா, சங்கரன்கோவில் கோட்டாட்சியர் கவிதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சுற்றுலாத்துறை அமைச்சருக்கு வரவேற்பு



கடையம் தெற்கு ஒன்றியம் கடனா நதி சுற்றுலா வளர்ச்சி மற்றும் பொட்டல்புதூர் தர்கா சுற்றுலா வளர்ச்சி குறித்த ஆய்வுக்கு வருகை தந்த தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரனை மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் முன்னிலையில் வரவேற்றார். பேரூர் செயலாளர் அழகேசன், பொருளாளர் சரிப், தென்காசி நகர செயலாளர் சாதியர், செங்கோட்டை வெங்கடேசன், சுடலை, கீழப்பாவூர் சிவன் பாண்டியன், முக்கூடல் லட்சுமணன், மாணவரணி ரமேஷ், பொன்செல்வன், கடையநல்லூர் சேர்மன் ஹபீப், மகளிர் அணி சங்கீதா சுந்தரி பாண்டியராணி கலந்துகொண்டனர்.

## மனுநீதி நாள் முகாம்



வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் வட்டம், வேலம்பட்டு ஊராட்சி, எல்லம்மாள் லக்சிகான் திருமண மண்டத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், 122 பயனாளிகளுக்கு ரூ.1.60 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இம்முகாமில் கீ.வ.குப்பம் ஒன்றியக்குழுத்தலைவர் ரவிசந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கவிதா சுதாசேகர், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் சுபலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் சீதா, மாவட்ட வழங்கல் அலுவலர் சுமதி, கீ.வ.குப்பம் வட்டாட்சியர் சந்தோஷ்குமார், வேலம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் மேவிதா தீர்த்தகிரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## குழந்தைகளுக்கான நடைபயணம் விழிப்புணர்வு பேரணி




**வேலூர், நவ. 14–**

வேலூர் மாவட்டத்தில் தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் குழந்தைகளுக்கான நடைபயணம் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இப்பேரணியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சஞ்ஜீத். மாவட்ட சமூக நல அலுவலர் உமா, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) சரவணன், குழந்தைகள் நலக்குழுமம் தலைவர் வேதநாயகம், நன்னடத்தை அலுவலர் ஏகாம்பரம் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# காளியம்மன் கோவிலில் திருவிழா



சேலம், நவ. 14-

சேலம் கிச்சிப்பாளையம் சின்ன மாரியம்மன், காளியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு, சேலம் மாநகர சிவாஜி சமூக நல பேரவை சார்பில், சின்ன மாரியம்மனுக்கு பூஜைகள் செய்து வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து சின்ன மாரியம்மன் கோவில் அருகில் நீர்மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாநகர சிவாஜி சமூக நல பேரவை தலைவர் பிரபு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாநகர ராஜீவ் காந்தி பஞ்சாயத்து சங்கத்தின் தலைவர் லயன் டாக்டர் ரகுநாத் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார். இதை பொதுமக்கள் வரிசையில் நின்று நீர் மோர் வாங்கி அருந்தி மகிழ்ந்து சென்றனர். மேலும் இந்நிகழ்வில் சந்திரசேகர், குணசேகரன், சின்ன கண்ணன், ஆனந்த், சங்கர், பூசாரி அய்யனார், ஆன்மீக சொற்பொழிவாளர் சேலம் சிட்டிபாபு, லங்கேஸ்வரன், மணி, அமர்நாத் சஞ்சய், கோவை சுந்தரம் மற்றும் சமூக ஆர்வலர்கள், சிவாஜி சமூக நல பேரவை நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அழைப்பாளர்களுக்கு மாநகர சிவாஜி, நல பேரவை தலைவர் பிரபு அனைவருக்கும் சால்வை அணிவித்து கௌரவித்தார்.

# அரசு நலத்திட்ட உதவி வழங்கல்



ஈரோடு மாவட்டம், நசியனூர் அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# சுகாதார நிலையத்தில் ஆட்சியர் ஆய்வு



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி கீ.வ.குப்பம் வட்டம், வடுகந்தாங்கல் அரசு சமுதாய சுகாதார நிலையத்தில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், இச்சிபாளையம் ஊராட்சி, வளந்தான்கோட்டை பகுதியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# உதவி ஆணையர் அலுவலகம் திறப்பு



தமிழ்நாடு முதலமைச்சர் காணொலி மூலம் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ரூ.3.65 கோடி செலவில் சேலம் மாவட்டம், குகை பகுதியில் கட்டப்பட்டுள்ள சேலம் மண்டலத்திற்கான ஒருங்கிணைந்த இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தினை திறந்து வைத்ததைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்.

# திருமண மண்டபத்தை திறந்து வைத்த முதல்வர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கடலூர், தேவநாதசுவாமி கோயிலில் புதியதாக கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் மண்டபத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றிவைத்தார்.

# பாலியல் துன்புறுத்துதலில் ஈடுபடுகின்றவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகள் கிடைக்க சட்ட திருத்தங்கள் கொண்டுவர கோரிக்கை

தென்காசி, நவ. 14-

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து விடுத்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் சமீப காலமாக பாலியல் ரீதியான பிரச்சனைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு உடன்குடியில் ஒரு பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியரால் விளையாட்டுப் போட்டிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாணவிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு பயிற்சி ஆசிரியரே காரணமாக இருந்தது உண்மையிலேயே வேதனையான ஒரு செய்தி. மற்றொருபுறம் ஆண்கள் படித்துவிட்டு



தங்குகின்ற தங்கும் விடுதியில் பாதுகாவலரே மாணவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது அதிர்ச்சியான செய்தி. ஆணுக்கு ஆண் பாலியல் தொல்லை கொடுப்பது, பெண்ணுக்கு பெண் பாலியல் தொல்லை கொடுப்பது இப்படி பாலியல் ரீதியான பிரச்சனைகள் தினம் தினம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

பெற்றோர்கள் பிள்ளை களை பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நம்பி அனுப்பி வைக்கிறார்கள். பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு பெற்றோர்களாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள் தவறும் பட்சத்தில் ஒரு சில ஆசிரியர்கள் செய்யும் தவறுக்கு ஒட்டுமொத்த ஆசிரியர் மேலும் நம்பிக்கை இழக்கிறார்கள். பெற்றோர்கள் பள்ளிகளில் மட்டும் தான் இப்படி நடக்கிறதா என்றால் வெளியிலும் இது போன்ற பிரச்சனைகள் இருக்கிறது. இதற்கு மத்திய, மாநில அரசுகள் காணும் தீர்வு என்ன. ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது அந்நாட்டு மக்களின் நல்லொழுக்கத்தில் தான் இருக்கிறது. மத்திய மாநில அரசுகள் பாலியல் பிரச்சனைகளுக்கு முடிவு கட்டுகின்ற வகையில் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் சட்ட திருத்தங்களை கொண்டு வர வேண்டும். பச்சிளம் குழந்தைகள் முதல் மாணவர்கள் இளைஞர்கள் பெரியவர்கள் முதியவர்கள் என்று அனைவரும் இன்றைக்கு செல்போன் பயன்படுத்துகின்றார்கள். செல்போனில் நல்ல பல விஷயங்களை பார்க்கின்ற பொழுது இடையிடையில் பாலியல் ரீதியான படங்கள் வந்து கொண்டிருக்கிறது. இதனை கட்டுப்படுத்துவதற்கு மத்திய மாநில அரசுகள் முயற்சிகள் செய்ய வேண்டும். திரைப்படங் களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் பாலியல் ரீதியான தூண்டுகின்ற காட்சிகளை தடை செய்ய வேண்டும். அரசு பள்ளிகளிலும் கல்லூரியிலும், தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆண், பெண் என இரண்டு உடற்பயிற்சி ஆசிரியர்களை ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் நியமிக்க மத்திய மாநில அரசுகள் ஆவண செய்ய வேண்டும். பாலியல் துன்புறுத்துதலில் ஈடுபடுகின்றவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகள் கிடைக்கின்ற வகையில் மத்திய மாநில அரசுகள் சட்ட திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். என்றார்.

# கலையரங்கம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர்



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், நாட்டுமங்களம் ஊராட்சி, அங்காள பரமேஸ்வரி கோவில் அருகில், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கலையரங்கம் கட்டடப் பணியினை அமைச்சர் மெய்யநாதன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• வியாழன் • நவம்பர் 14, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# தட்டாஞ்சாவடி தொகுதியைச் சார்ந்த முதியோர், விதவைகளுக்கு உதவித்தொகைக்கான அரசாணை

## முதலமைச்சர் ரங்கசாமி வழங்கல்



**புதுச்சேரி, நவ. 14–**

புதுவை அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்பில் தட்டாஞ்சாவடி தொகுதியை சேர்ந்த முதியோர் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் 100 பேருக்கு மாத உதவித் தொகைக்கான ஆணையினை முதலமைச்சர் ரங்கசாமி, தனது இல்லத்தில் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.பி.ரமேஷ், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# ஓட்டுநர், நடத்துனருக்கு ஓய்வு அறை எம்எல்ஏ, எம்பி திறந்து வைத்தனர்



**சங்கரன்கோவில், நவ. 14–**

சங்கரன்கோவில் போக்குவரத்து பணிமனையில் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஓய்வு அறையை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ மற்றும் தென்காசி எம்பி ராணி ஸ்ரீகுமார் திறந்து வைத்தனர்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு போக்குவரத்து பணிமனையில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா கடந்த 2021 ஆம் ஆண்டு ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது போக்குவரத்து பணிமனையில் ஓட்டுநர்கள், நடத்துனர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 400 போக்குவரத்து தொழிலாளர்கள் தாங்கள் ஓய்வு எடுக்கும் அறை முறையாக பராமரிக்கப்படவில்லை எனவும், ஆஸ்பெட்டாஸ் சீட் போடப்பட்டுள்ளதால் ஓய்வு எடுக்க சிரமமாக உள்ளதாகவும், இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். அவர்களிடம் பேசிய எம்எல்ஏ ராஜா இதுகுறித்து போக்குவரத்து துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இதனை ஆய்வு செய்து சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து செயல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். இந்நிலையில் புதிய ஓய்வு அறை அமைக்க முடிவு செய்து சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.25 லட்சம் ஒதுக்கி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ உத்தரவிட்டார். இந்நிலையில் புதிதாக கட்டப்பட்ட ஓய்வு அறை திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு போக்குவரத்து துறை துணை மேலாளர் (தொழில்நுட்பம்) சங்கரநாராயணன் தலைமை வகித்தார். ஒழுங்கு நடவடிக்கை மேலாளர் மாரியப்பன், பணிமனை மேலாளர் பாலசுப்ரமணியன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், நகராட்சி கமிஷனர் சபாநாயகம், தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ மற்றும் தென்காசி எம்பி ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் புதிய ஓய்வு அறையை திறந்து வைத்தனர். இதில் திமுக மாவட்ட துணை செயலாளர் புனிதா, மாவட்ட பொருளாளர் சங்கை இல. சரவணன், பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, நகர அவைத் தலைவர் முப்பிடாதி, நகர துணை செயலாளர் முத்துக்குமார், போக்குவரத்து தொமுச கிளை தலைவர் சங்கர்ராஜ், நிர்வாகிகள் குருசாமி, ராஜ், செல்வகுமார், சிவராமச்சந்திரன் வீரக்குமார், செந்தில்குமார், முருகன், தலைவர் பாண்டியன், பண்டாரக்கண்ணு, கணேசன், வசந்தராஜ், வேல்சாமி, மாவட்ட பிரதிநிதி ஸ்தோவான், மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், அரசு ஒப்பந்ததாரர் கேஎஸ்எஸ் மாரியப்பன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஜலால், அஜய்மகேஷ்குமார், ஜெயக்குமார், சிவாஜி, பாலாஜி, யாசர், விக்னேஷ், முபின், கோதர், ஜான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தியாகராசபுரம் கிராமத்தில் தனித்தனி இடங்களில் மாணவர்கள் கல்வி கற்கும் சூழல்

## ஒரே இடத்தில் பள்ளி கட்ட கோரிக்கை

**கள்ளக்குறிச்சி, நவ. 14–**

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் வட்டம் தியாகராசபுரம் ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளி ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை ஊராட்சிக்குட்பட்ட சேவை மைய கட்டிடத்திலும், நான்காம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஊராட்சி மேம்பாட்டு திட்ட கட்டிடத்திலும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை புதிதாக கட்டப்பட்ட நடுநிலைப் பள்ளியிலும் தனித்தனியாக இயங்கி வரும் அவலம் ஏற்பட்டுள்ளது.




இதனால் மாணவர்கள் அலைக்கழிக்கப்படுவதாக பெற்றோர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இது சம்பந்தமாக தலைமை ஆசிரியர் மாவட்ட கல்வி அலுவலர் இடமும், பள்ளி மேலாண்மை குழு கூட்டத்திலும் தீர்மானங்கள் இயற்றப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரே இடத்தில் பள்ளி கட்டிடம் கட்ட இடம் இல்லாததால் கைவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து பள்ளி அருகாமையில் சங்கர் என்பவரின் பட்டா நிலங்களை பள்ளி கட்டிடம் கட்ட தருவதாகவும், அதற்கு மாறாக மாற்று இடமும், தொகுப்பு வீடு வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அதனையடுத்து பள்ளி மேலாண்மை குழு உறுப்பினராக இருக்கக்கூடிய திருப்பதி என்பவர் மாவட்ட ஆட்சியரிடம் பள்ளி கட்டிடத்தை ஒரே இடத்தில் அமைத்து மாணவர்களின் அலைக்கழிக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். அந்த கோரிக்கையை ஏற்ற மாவட்ட ஆட்சியர் உடனடியாக ஒரே இடத்தில் பள்ளி இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

# நலத்திட்ட உதவி வழங்கல்



திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் காங்கேயம் வட்டம், ஊதியூர் பழனி பாதயாத்திரை கோவில் மண்டபத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

# நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி



சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், குரால்நத்தம் ஊராட்சி, ஜருகுமலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

# சமுதாய கூடம் கட்டடம் கட்டும் பணி



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட சமுத்திரம் காலனியில் நவீன சமுதாய கூடம் கட்டடம் கட்டும் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன்.

# இந்திராகாந்தி அரசு மருத்துவ கல்லூரியில் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு கூட்டம்



**புதுச்சேரி, நவ. 14–**

புதுவை மாநில சுகாதார இயக்ககம், மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம், புதுவை கலெக்டர் அலுவலகத்துடன் இணைந்து இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் புகையிலை மற்றும் போதைப் பொருள் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடத்தியது.

மாநில புகையிலை கட்டுப்பாட்டு அதிகாரி வெங்கடேஷ் வரவேற்றார். கூட்டத்தில் பல்வேறு கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் புகையிலை மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள், உடல்நல கேடுகள், குடும்பம் மற்றும் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள், அதை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்திராகாந்தி மருத்துவ கல்லூரியின் இயக்குநர் டாக்டர் உதயசங்கர் தொடக்க உரையாற்றினார். முதுநிலை காவல் கண்காணிப்பாளர் கலைவாணன் சிறப்புரை ஆற்றினார்.

கலெக்டர் குலோத்துங்கன் தலைமை வகித்து பேசினார். இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி டீன் ராமச்சந்திர பட் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில ஆலோசகர் சூரியகுமார் செய்திருந்தார். போதை மற்றும் புகையிலை பற்றிய விளக்கவுரையை இணை பேராசிரியர் பிரகாஷ், மதியழகன் ஆகியோர் வழங்கினர். கூட்டத்தில் பங்கேற்றவர்கள், போதை மற்றும் புகையிலைக்கு எதிரான உறுதிமொழி ஏற்றனர்.

# திமுக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



செஞ்சி, நவ. 14-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி மேற்கு ஒன்றியம் ஆலம்பூண்டி, சத்திய மங்கலம், சோ.குப்பம், புதுப்பாளையம், பாக்கம், புலிப்பட்டு, செம்மேடு, மேல் பாப்பம்பாடி, புத்தகரம், நல்லான் பிள்ளை பெற்றால், தடாகம், செத்தவரை, போத்துவாய் ஆகிய ஊராட்சிகளில் திமுக சார்பில் பாக முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தலைமை தாங்கினார். செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாநில இளைஞரணி துணை செயலாளரும், செஞ்சி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக், கலந்துகொண்டு ஓட்டுச்சாவடி பாகம் முகவர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தார். இதைத் தொடர்ந்து மாநில இளைஞரணி துணை செயலாளரும், தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக் பேசுகையில்: கட்சி நிர்வாகிகள் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டசபை தொகுதி தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். ஓட்டு சாவடி பாகம் முகவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வாக்காளர்கள் பட்டியலில் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். நடைபெற உள்ள வாக்காளர்கள் திருத்தம்சிறப்பு முகாமில் பாகமுகவர்கள் அனைவரும் கலந்துகொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்கள், வாக்காளர் பட்டிய லில் பெயர் இடம்பெறாதவர் களையும், புதியதாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள், மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும். முதலமைச்சர் குறிப்பிட்டது போல நிர்வாகிகள் அடிக்கடி கிராமத்தில் உள்ள மக்களை சந்தித்து அவர்களிடமிருந்து குறைகளை கேட்டு அறிந்து தலைமைக்கு தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், ஒன்றிய அவைத் தலைவர் மணிவண்ணன், ஒன்றிய துணை செயலாளர்கள் சோ.குப்பம் ராஜேந்திரன், அகிலா பார்த்திபன், அன்பு கிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதிகள் கதிரவன், பஞ்சாட்சரம், மன்னார், அய்யாதுரை, ஒன்றிய பொருளாளர் டிலைட் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் சார்பில் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

கோவை, நவ. 14-

தேசிய கல்வி தினத்தையொட்டி, டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் இந்தியாவில் திறமையான இளைஞர்களை உருவாக்கும் வகையில், அந்த இடைவெளியை குறைக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் இந்நிறுவனம் தனது கல்வி மற்றும் தொழில் பயிற்சி திட்டங்கள் மூலம் கர்னாடகா மற்றும் இந்தியா முழுவதும் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கிய இளைஞர்களுக்கு அவர்களின் திறமைகளை வளர்த்து அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் இந்நிறுவனம் கடந்த 2007ம் ஆண்டு டொயோட்டா தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தை துவக்கியது. இதன் மூலம் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக,



பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களுக்கு ஆட்டோமொபைல் உற்பத்தியில் துறையில் இலவச, உயர் தரக் கல்வியை வழங்கி வருகிறது. இதன் பாடத்திட்டமானது ஆட்டோ மொபைல் துறையை முழுமையாக அறிந்து கொள்ளும் விதமாகவும், உலகளாவிய உற்பத்தி நடைமுறைகள் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. திறமையான தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான தேவை அதிகரித்து வரும் சூழலில், அதை பூர்த்தி செய்யும் வகையில் இதில் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை 600 மாணவிகள் உட்பட 1200 ஆக உயர்த்தியுள்ளது. மேலும் 'ஸ்கில் இந்தியா' திட்டத்தின் கீழ் டொயோட்டா நிறுவனம் கௌசல்யா திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது, இது "கற்றல் மற்றும் சம்பாதித்தல்" என்பதை அடிப்படையாகக் கொண்ட இரண்டு வருட படிப்பாகும். இந்த திட்டம் மாணவர்கள் படிக்கும்போதே வருமானம் ஈட்ட உதவுகிறது. டொயோட்டா தொழில்நுட்ப கல்வித் திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் 13,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் 60 மையங்களை டொயோட்டா நிறுவனம் நிறுவியுள்ளது. இதன் மூலம் அவர்களின் தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதோடு, இந்தியா மற்றும் ஜப்பான் இடையிலான உறவையும் இந்நிறுவனம் வலுப்படுத்துகிறது. இதுகுறித்து பேசிய டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு நிர்வாக துணைத் தலைவர் ஜி.சங்கரா கூறுகையில், தேசிய கல்வி தினம் 2024ஐ நாம் கடைபிடிக்கும் நிலையில், வாழ்நாள் முழுவதும் கற்றலை வளர்ப்பதற்கும், அனைவருக்கும் பன்முகத்தன்மை, சமத்துவம் ஆகியவற்றை வழங்கிடும் வகையில் தரமான கல்வி மற்றும் விரிவான திறன் மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், இளைஞர்களை தன்னம்பிக்கை உள்ளவர்களாக, உற்பத்தித்திறன் கொண்ட சமூக உறுப்பினர்களாக மாற்றுவதை நாங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம். என்றார்.

# தினசரி உணவில் பாதாம் எடுத்து கொண்டால் நீரிழிவு நோய் வராமல் தடுக்கலாம்

கோவை, நவ. 14-

நீரிழிவு நோய் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதற்கான சரியான மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளவும் ஆண்டுதோறும் நவம்பர் 14ந்தேதி உலக நீரிழிவு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது."உலகின் நீரிழிவு தலைநகரம்" என்று இந்தியா அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் சமீபத்திய ஆய்வில் 10 கோடி இந்தியர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அதேசம் 13.6 கோடி பேர் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையில் இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இது நீரிழிவு நோய் வராமல் நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை நமக்கு ஏற்படுத்துகிறது. பாதாம், ரத்த சர்க்கரை அளவை பராமரிக்க உதவுவதோடு, டைப் 2 நீரிழிவு நோயாளிகளுக்கு ரத்த சர்க்கரை



அளவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதோடு, கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகளின் ரத்த சர்க்கரை தாக்கத்தை குறைப்பதிலும், உணவு உண்பதற்கு முந்தைய இன்சுலின் அளவை சரியான நிலையில் வைத்திருப் பதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. புதுடெல்லியைச் சேர்ந்த நீரிழிவு, வளர்சிதை மாற்ற நோய்கள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிக்கான போர்டிஸ்சிடிஓசி மையத்தின் பேராசிரியரும் தலைவருமான டாக்டர் அனுப் மிஸ்ரா தலைமையில் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வில், உணவுக்கு முன் பாதாம் எடுத்துக் கொள்ளும்போது, அது நீரிழிவுக்கு முந்தைய நிலை மற்றும் அதிக உடல் பருமன் உள்ள ஆசிய இந்தியர்களின் ரத்த சர்க்கரை கட்டுப்பாட்டை கணிசமாக மேம் படுத்துகிறது என்று கண்டறியப் பட்டுள்ளது. குறிப்பாக, இந்த ஆராய்ச்சியில் நீரிழிவுக்கு முந்தைய நிலையில் இருந்தவர்கள் கலந்து கொண்டனர். இதில் 12 வாரங்களுக் குள் கால் பகுதியினரின் ரத்த சர்க்கரை அளவானது இயல்பு நிலைக்கு திரும்பியது. கூடுதலாக, இந்தியாவில் நடந்த மற்றொரு ஆய்வில், நீரிழிவு நோய் ஏற்படும் அபாயத்தில் உள்ள இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் 12 வாரங்கள் பாதாம் எடுத்துக் கொண்ட நிலையில் அது அவர்களுக்கு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. இது நமது ரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும். இது குறித்து ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய ஆலோசகர், ஷீலா கிருஷ்ணசாமி கூறுகையில், ஒரே இடத்தில் அமர்ந்து பணியாற்றும் சூழல் மற்றும் மோசமான உணவுப் பழக்கவழக்கங்களால் இந்தியாவில் நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. அவை குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளன, இது ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்காது. இதில் சிறந்த அம்சம் என்ன வென்றால், பாதாம் மிகவும் பன்முகத் தன்மை வாய்ந்தது மற்றும் அதிக சத்து நிறைந்தது. எனவே இதை ஒவ்வொரு நாளும் எந்த நேரத்திலும், அப்படியே அல்லது ஏதேனும் உணவுடன் சேர்த்து சாப்பிடலாம் என்று தெரிவித்தார்.

# உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு



தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையான மேலக்கரந்தையில் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் புத்தகம் கொடுத்து வரவேற்றார்.

# சாகுபடி பயிர்கள் குறித்து விபரங்கள் பதிவு செய்யும் பணி



திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் வட்டமலை கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவ, மாணவியர்கள் கிராப் சர்வே செயலி மூலம் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் குறித்த விபரங்களை பதிவு செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# சோனா தொழில்நுட்பக் கல்லூரி திறன் மேம்பாட்டு போட்டி போஸ்டர் வெளியீட்டு விழா




சேலம், நவ. 14-

சேலம் சோனா தொழில் நுட்பக் கல்லூரியில் மாநில அளவில் பள்ளி மாணவர் களுக்கான திறன்மேம் பாட்டு போட்டிகள் மற்றும் கலை விழா சோனா சேம்ப்ஸ்'24 வருகின்ற நவம்பர் 29ம் தேதி கல்லூரியின் வளாகத்தில் நடைபெற உள்ளது. இதற்கான போஸ்டர் வெளியீட்டு விழா கல்லூரி நூலக அரங்கில் நடைப்பெற்றது.

இந்த விழாவில் இளம் விஞ்ஞானி, இளம் கண்டுபிடிப்பாளர், கவிதை எழுதுதல், ஓவியம் வரைதல், வினாடி வினா, பாடல் மற்றும் இசை, பேச்சு போட்டி, பழம், காய்கறி செதுக்குதல், மைம், நடனம் குழு மற்றும் தனி, வேடிக்கை விளையாட்டுகள் போன்று பல பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த போட்டிகளில் பங்கேற்க அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு அழைப்புகள் விடப்பட்டுள்ளது. மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சேலம் மற்றும் சுற்றுவட்டார பள்ளிகளில் இருந்து பங்கேற்க உள்ளனர்.

பள்ளி மாணவர்களின் தனி திறன்களை அறிந்து அவர்களை ஊக்கப் படுத்தும் விதமாக இதுபோன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ மாணவிகளுக்கு ரூ.1 லட்சம் மதிப்பிலான பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். எனவே பள்ளி மாணவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு தங்களது தனித்திறமைகளை திறம்பட வெளிப்படுத்த வேண்டும் என சோனா கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.ஆர்.ஆர்.செந்தில் குமார் கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்வின் போது துறைத்தலைவர் முனைவர் ரேணுகா, விழாவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் செந்தில்வடிவு மற்றும் மாணவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# வீரர், வீராங்கனைகளை பாராட்டிய ஆட்சியர்



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றிபெற்ற கடலூர் மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

**மாட்சிமிகு கோட்டாட்சியர் அவர்கள், விழுப்புரம்.**
அ.சி.மு.அ.எண்:4.7223/2023 நாள்:6.11.2023

தட்சணாமூர்த்தி, த/பெ.தனபால்,
மாரியம்மன் கோயில் தெரு, காந்திநகர்,
திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம் மாவட்டம்.
...மனுதாரர்

வட்டாட்சியர் அவர்கள்
திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா,
விழுப்புரம் மாவட்டம். .....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது தாயார் கலியாம்பாள் க/பெ.தனபால், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி, காந்திநகரில் கடந்த 06.07.2004 தேதியில் இறந்ததாகவும், மனுதாரர் பதிவு செய்யாமல் விட்டு விட்டதாகவும், எதிர்மனுதாரர் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது. மேற்படி இறப்பை பதிவு செய்ய யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் ஒருதலைபட்சமாக உத்தரவு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**மனுதாரர் விலாசம்**
தட்சிணாமூர்த்தி, த/பெ.தனபால்,
மாரியம்மன் கோயில் தெரு, காந்திநகர், திருவெண்ணெய்நல்லூர்,
விழுப்புரம் மாவட்டம். செல்: 8940636692.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● வியாழன் ● நவம்பர் 14, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# அரசு ராஜாஜி மருத்துவமனையில் தொடர்ந்து இரண்டரை லட்சம் பேருக்கு உணவளித்த நட்சத்திரம் நண்பர்கள்



மதுரை, நவ. 14–

மதுரை நட்சத்திரம் நண்பர்கள் நிறுவனர் ஸ்டார்குரு தலைமையில் ஏராளமான சமூக சேவைகளை தினந்தோறும் செய்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் நோயாளிகளுடன் தங்கியிருந்து கவனித்து வரும் காப்பாளர்கள் தினமும் ஆயிரம் பேருக்கு விலையில்லா உணவு, குடிநீர், மற்றும் பழ வகைகளை தொடர்ந்து வழங்கி வருகின்றனர். இதனால் இதுவரை இரண்டரை லட்சம் பேர்கள் பயனடைந்து உள்ளனர். நேற்று நட்சத்திரம் நண்பர்கள் அமைப்பின் நிறுவனர் ஸ்டார்குரு தலைமையில் நடந்த இருநூற்று ஐம்பதாவது நாள் விழாவில் 2000க்கும் மேற்பட்டோருக்கு விலையில்லா உணவு, குடிநீர், பழ வகைகள் வழங்கும் நிகழ்வை மதுரை மாவட்ட குற்ற பிரிவு டி.எஸ்.பி ஜஸ்டின்பிரபாகரன் துவக்கி வைத்தார். சட்ட ஆலோசகர். வக்கீல். முத்துக்குமார் உட்பட நட்சத்திரம் நண்பர்கள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். இதுகுறித்து நட்சத்திரம் நண்பர்கள் அமைப்பின் நிறுவனர் ஸ்டார்குரு கூறும்போது: எங்கள் நட்சத்திரம் நண்பர்கள் அமைப்பில் மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் ஓய்வு பெற்ற அரசு மற்றும் வங்கி அதிகாரிகள் தொழிலதிபர்கள் உட்பட பல்வேறு நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் தங்களது வேலை நேரங்கள் போக எஞ்சியுள்ள நேரத்தை பொது சேவைகள் செய்வதற்கு ஒதுக்கி வருகின்றனர். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தினமும் ஆயிரம் பேர் வீதம் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு விலையில்லா உணவு, குடிநீர், பழ வகைகளை வழங்கியுள்ளோம். கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் சீருடைகள் வழங்கியுள்ளோம். அடிப்படை வசதிகள் கிடைக்க பெறாத பள்ளிகளுக்கு சொந்த செலவில் அடிப்படை வசதிகள் செய்து தருகிறோம். மாற்று திறனாளிகளுக்கு தேவையான விலையில்லா உபகரணங்கள், விலையில்லா சக்கர நாற்காலிகளை வழங்கி உள்ளோம். பெண்களுக்கான சுய தொழில் திறனை ஊக்குவிக்கும் வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட விலையில்லா நவீன தையல் மிஷின்கள் வழங்கியும், சாலையோர ஆதரவற்றவர்களை மீட்டு அவர்களுக்கு உரிய முதலுதவி அளித்து பராமரித்து அவர்களது உறவினர்களிடம் சேர்த்து வைக்கும் பணியையும், வைகை ஆற்றின் தூய்மை செய்தல், ஆற்றினுள் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் அடர்ந்து படர்ந்து வளர்ந்துள்ள ஆகாய தாமரைகளை அகற்றி அப்புறப்படுத்தி வருகிறோம். ஆற்றின் இரு கரையோரங்களிலும் இருநூறுக்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி ஆற்றினுள் கழிவுகளை கொட்டுவதை கண்காணித்து ஆறு அசுத்தமாவதை தடுத்து நிறுத்துதல் போன்ற சேவைகளையும் தொடர்ந்து செய்து வருகிறாம்.

இனி வரும் காலங்களில் வைகை ஆற்று பாலத்தின் பக்கவாட்டு சுவர்களிலும், பாலத்திற்கு அடியிலும் போஸ்டர்கள் மற்றும் பிளக்கஸ் ஒட்டுவதை தடுத்து நிறுத்தி பாலத்தின் ஸ்திரத் தன்மையை காப்பதற்காக பாலத்தின் தமிழ் பாரம்பரியம் மிக்க வண்ண ஓவியங்களை வரைய உள்ளோம். மேலும் கோடை காலத்தை சமாளிப்பதற்காக முதல் கட்டமாக மதுரை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு நிழற்குடைகளை வழங்க உள்ளோம். மேலும் பசியால் வாடும் அனைவருக்கும் உணவு அளிப்பது எங்கள் இலக்கு என்று அவர் கூறினார்.

# ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளியில் மாணவர்கள் சுற்றுப்பயணம்




காரைக்கால், நவ. 14–

காரைக்கால் வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளி சார்பில், 9, 10 வகுப்பு மாணவர்களுக்கு, அறிவியல் மற்றும் கணித விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் இயற்கை நடையில், ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.

காரைக்காலை அடுத்த கோட்டுச்சேரி வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளி சார்பில், 9, 10 வகுப்பு மாணவர்களுக்கு, அறிவியல் மற்றும் கணித விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் இயற்கை நடையில், ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை பள்ளியின் துணை முதல்வர் கனகராஜ் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். தலைமை ஆசிரியர் அருள் முன்னிலை வகித்தார். மாணவர்கள் அறிவியல் மற்றும் கணித விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் இயற்கை நடையில், மத்திய அரசின் ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிக்கு சென்று, அறிவியல் கூடங்கள் கணித அறைகள், நூலகம், விளையாட்டுத் திடல், கூட்ட அரங்கு, உணவருந்துவிடம் மற்றும் பள்ளியை சுற்றியுள்ள சமூக அறிவியல் பூங்கா, இயற்கையோடு இணைந்த கல்வி முறை ஆகியவற்றை நடைப்பயணம் மூலம் அறிந்து கொண்டனர். இந்த “இயற்கை நடை” நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, பள்ளியின் பட்டதாரி ஆசிரியர்கள் தன்ராஜ், விஜயகுமார், ராஜேஸ்வரி மற்றும் கலைமதி ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



காரைக்கால், நவ. 14–

காரைக்கால் பஸ் நிலையம் எதிரே மத்திய அரசு கொண்டு வரவுள்ள வக்பு சட்ட திருத்த மசோதாவை கண்டித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காரைக்கால் புதிய பஸ் நிலையம் எதிரே நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட தலைவர் ஜெய்னுல் ஆபிதீன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ஒலி முகம்மது மற்றும் பலர் கண்டன உரையாற்றினர். மத்திய அரசு கொண்டு வரவுள்ள வக்பு சட்ட திருத்த மசோதாவை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு இஸ்லாமிய அமைப்பினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், காரைக்கால் மாவட்ட தவ்ஹீத் ஜமாத் சார்பில் இந்த கண்டன ஆர்ப்பாட் டம் நடத்தப் பட்டது. ஆர்ப்பாட்டத்தில், மத்திய அரசு கொண்டு வரவுள்ள வக்பு சட்ட திருத்த மசோதாவை கண்டித்தும், வக்பு சட்ட திருத்த மசோதாவை திரும்ப பெற வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பட்டது. ஆர்ப்பாட் டத்தில் பெண்கள் உள்ளிட்ட நூற்றுக்கு மேற் பட்டோர் கலந்து கொண்டனர்.

# மணவெளி தொகுதியின் மேம்பாட்டுப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடிக்க வேண்டும்

## சபாநாயகர் செல்வம் உத்தரவு



புதுச்சேரி, நவ. 14–

புதுவை மணவெளி தொகுதியில் மேற்கொள்ளப் பட்டு வரும் சாலைப் பணிகள், கழிவுநீர் வாய்க்கால் பணிகள், டி.என்.பாளையம் பகுதியில் தடுப்பணை பணிகள் உள்ளிட்டவை குறித்தும், மணவெளி தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் குறித்தும் அதிகாரிகளுடன் சபாநாயகர் செல்வம் நேற்று தனது அலுவலகத்தில் ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், வருவாய்த் துறை தாசில்தார் பிரித்திவி, செயற்பொறியாளர்கள் சந்திரகுமார், உமாபதி, ராதாகிருஷ்ணன், உதவி பொறியாளர் கோபி, அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், உதவி பொறியாளர் நாகராஜ், இளநிலை பொறியாளர்கள் சரவணன், நடராஜன், அகிலன், சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தின் கீழ் பூரணாங்குப்பம் முதல் நல்லவாடு வரையிலும், தவளக்குப்பம் முதல் நல்லவாடு வரையிலும், பூரணாங்குப்பம் முதல் நல்லவாடு ரோடு வரை உள்ள கல்லூரி இணைப்பு சாலை, நல்லவாடு ரோடு முதல் கொருக்குமேடு வரை உள்ள கல்லறை ரோடு ஆகிய சாலைகளை தார் சாலையாக அமைத்தல், இடையார்பாளையம் பகுதியில் ஜலகண்டேஸ்வரர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், ஞானமேடு பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் கழிவு நீர் வாய்க்கால் வசதியுடன் ஏற்படுத்துதல், டி.என். பாளையம் பகுதியில் புதிய தடுப்பணை அமைத்தல் மற்றும் பெருமாள் நகர் பாகூர் சாலை உடையார் வீதி ஆகிய பகுதிகளில் புதிய தார் சாலை அமைத்தல், புதுக்குப்பம் பகுதியில் உள்ள சுனாமி குடியிருப்பில் அனைத்து சாலைகளையும் கழிவுநீர் வாய்க்கால் வசதிகள் கூடிய சிமெண்ட் சாலையாக அமைத்தல், மணவெளி பகுதியில் மணவெளி முதல் சின்ன வீராம்பட்டினம் வரை உள்ள பிரதான சாலை அமைத்தல், நோணாங்குப்பம் பகுதியில் ஆற்றங்கரை சாலை கழிவுநீர் வாய்க்காலுடன் கூடிய புதிய சாலை அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டு பணிகள் குறித்து சபாநாயகர் செல்வம் ஆய்வு செய்து பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடிக்க வேண்டும் என, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# நிதி பற்றாக்குறை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு கூடுதல் நிதி பெற்றுத்தர கோரிக்கை



கோவை, நவ. 14–

கோவை கிணத்துக்கடவு ஒன்றியம் ஊராட்சி மன்றத் தலைவர் கூட்டமைப்பின் சார்பில் கூட்டமைப்பின் தலைவரும், சொக்கனூர் ஊராட்சி மன்றத் தலைவருமான பிரபு(எ) திருநாவுக்கரசு கோதவாடி ஊராட்சி மன்ற தலைவரும் கோவை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவரின் கூட்டமைப்பு மாவட்ட செயலாளரும் கே.ஆர். ரத்தினசாமி ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கூடுதல் ஆட்சியர் சுவேதா சுமனிடம் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர். உடன் கிணத்துக்கடவு ஊராட்சி மன்ற தலைவரின் கூட்டமைப்பின் கௌரவ தலைவர் அரசாம்பாளையம் தலைவருமான சுந்தர்ராஜன், கூட்டமைப்பின் துணை தலைவரும் வரதனூர் ஊராட்சி மன்ற தலைவருமான தேவி முருகவேல், பொட்டையாண்டி புரம்பு தலைவர் ராம்குமார், முத்தூர் தலைவர் சதீஷ்குமார், குதிரையாளையம் பாளையம் தலைவர் தர்மராஜ், குருநல்லிபாளையம் தலைவர் விஜய சங்கர் உட்பட பலர் உடன் இருந்தனர்.

மனுவில் நிதிப் பற்றாக்குறை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு (அத்தியாவிசிய பணிகளுக்கு) கூடுதல் நிதி பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ளிட்ட ஏழு முக்கிய அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி ஊராட்சி மன்ற தலைவர் களின் கூட்டமைப்பு சார்பில் மனு அளித்தனர்.

# புத்தகத் திருவிழா முன்னேற்பாடு பணி குறித்து ஆட்சியர் ஆய்வு



சேலம், புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சித் திடலில் 29.11.2024 முதல் 09.12.2024 வரை புத்தகத் திருவிழா நடைபெறவுள்ளதையொட்டி, முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன் சேலம் மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங்.

# குடிநீர் இணைப்பு சிறப்பு முகாம்



கோவை, நவ. 14–

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்தியம் மண்டலம் அலுவலக வளாகத்தில் புதிய குடிநீர் இணைப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் சிறப்பு முகாமை மத்திய மண்டலம் தலைவர் மீனாலோகு, மற்றும் பொது சுகாதார குழு தலைவர் பெ. மாரிசெல்வன் ஆகியோர் துவக்கி வைத்து மேற்பார்வையிட்டனர். மேலும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கான விண்ணப்பங்களை பொதுமக்களிடம் இருந்து பெற்ற உடனடியாக இணைப்புகள் வழங்க மாநகராட்சி அலுவலர்களிடம் பரிந்துரை செய்தனர். இந்த சிறப்பு முகாமில் கிழக்கு மண்டல உதவி ஆணையாளர் மாமன்ற உறுப்பினர் சுமா விஜயகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், பொது மக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007